Published on 14, Jan-2025 ISSN: 3049-2688 (Online)

# வல்லாண் பதுக்கை: பெருங்கற்கால‌ச் சின்னம்

அ. சகாய ரெஜசி கலா
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் முதல்நிலைச் சின்னமாகக் கருதப்படுவது பதுக்கை. இப்பதுக்கையானது கல் மற்றும் தழைகளாலானக் குவியல் என்பது தொல்லியல் ஆய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து. இக்கருத்தினை உலகளவில் நடந்து வரும் அகழாய்வுகளில் கிடைக்கின்ற தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. பொதுவாக, பெருங்கற்காலம் என்பது பெரிய கற்களைக் கொண்டு ஈமச்சின்னங்கள் உருவாக்கப்பட்டக் காலத்தைக் குறிக்கிறது. இத்தகைய பதுக்கைகள் சுமார் 10 முதல் 15 டன் எடைக் கொண்ட கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.[1] இவ்வளவு எடைக் கொண்டு உருவாக்கப்பட்ட பதுக்கைகளைத் தனி ஒரு மனிதனால் உருவாக்கி இருந்திருக்க முடியாது. ஒரு இனக்குழு மக்கள் அனைவரும் இணைந்து முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு இச்சின்னங்களை உருவாக்கி இருத்தல் வேண்டும் என்பது தெளிவு. இத்தகைய பதுக்கைகளின் தோற்றம் குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்ற சூழலில் தொல்லியல் தரவுகள் புதையுண்ட ஈமச்சின்னங்களை வெளிக்கொண்டு வருகின்றன. அதனைக் கொண்டு பெருங்கற்கால மக்களின் காலம், சடங்குகள், நம்பிக்கைகள் போன்றவற்றை அறிந்துக் கொள்ள முடியும். ஆனால் மிகப்பெரிய, அதிக எடையுள்ள இப்பதுக்கைகளைத் தூக்கி யார் நிறுத்தியிருக்க கூடும் என்பதைத் தெளிவுப்பட கூற இயலவில்லை. இந்த வினாவிற்கு விடையளிக்கும் விதமாகச் சங்க இலக்கியத்தில் பதுக்கையினை உருவாக்கியவர்கள் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன. அவர்கள் யார்? எதற்காகப் பதுக்கைகளை உருவாக்கினர் என்பது குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

வல்

பாட்டும், தொகையும் வல் என்ற சொல்லிற்கு - சூதுபலகை, விரைவாக, உணர்ந்திருத்தல்[2] என்ற பொருளினைப் தருகிறது. வல் என்ற சொல்லானது சங்க இலக்கியத்தில் பல இடங்களில் வருகின்றன. அவற்றில் சில,

வல்விரைந்து[3] – நற்றி. 17

வல்வில்[4] கானவர் – குறுந்.335

வலைவல் பாண்மகன் – ஐங்குறு.48

வல்வாய் உருளி – பதிற்று.27

போர்வல் யானை – அகம்.36

வல்வேற் சாத்தன் – புறம்.242

மேற்கண்ட இப்பாடல்களின் வழி பல உரையாசிரியர்கள் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில் வல் என்ற வார்த்தைக்கு வலிய, வல்ல, விரைந்து என்ற மூன்று பொருள்கள் கிடைக்கின்றன. இதனைக் கொண்டு பார்த்தோமானால் வல் என்ற சொல்லிற்கு வலிமையுடைய அல்லது விரைந்து என்ற பொருளானது விளங்குகிறது.

வல்லாண்

வல்+ஆண் =வல்லாண். வல்லாண் என்கிற சொல்லானது சங்க இலக்கியத்தில் 4 இடங்களில் பயின்று வருகின்றன.

| எண் | பாடல் எண் | பாடல் வரி |
|---|---|---|
| 1 | புறநானூறு:346 | கல்வியென் என்னும், வல்ஆண் சிறாஅன் |
| 2 | அகநானூறு:31 | வில் அலைத்து உண்ணும் வல்லாண் வாழ்க்கை |
| 3 | அகநானூறு:35 | வல்லாண் பதுக்கைக் கடவுள் |
| 4 | அகநானூறு:107 | வல்ஆண் அருமுனை நீந்தி |

வில் அலைத்து உண்ணும் வல்லாண் வாழ்க்கை

தமிழ்கெழு மூவர் காக்கும் - அகம்:31

விற்போரில் பகைவர்களை அழித்து அவ்வெற்றியாலெய்தும் திறைப் பொருள்களை உண்ணும் வலியஆண்மை பொருந்திய வாழ்க்கையினை உடையவர்கள்[5] தமிழ் நாட்டினை ஆளும் மூவேந்தர்கள் என ந.மு.வேங்கடசாமி குறிப்பிடுகிறார். வில்லாற் பொருது உண்ணும் வலிய ஆண்மையுடைய வாழ்க்கையராகிய தமிழ் மூவேந்தர்[6] என ந.சி. கந்தையா அவர்கள் விளக்கம் கொடுக்கிறார். வலியஆண்மை பொருந்திய வாழ்வினைக் கொண்டவர்கள் மூவேந்தர்கள்[7] என நியூ செஞ்சுரி புத்தக நிலையம் வெளியிட்டுள்ள பதிப்பில் பொருள் கூறப்பட்டுள்ளது. மற்றோரு பாடலில் உள்ள,

வல்ஆண் அருமுனை நீந்தி -அகம்:107

என்ற வரிக்கு விளக்கமாக, வடுகரது வலிய ஆண்மையுடைய அரியபோர்முனை போன்ற இடம்[8] என ந.சி. கந்தையா அவர்கள் பொருள் கூறுகிறார். வலிய ஆண்மை விளங்கும் அரிய போர் முனையாவமாகிய சுரம்[9] என ந.மு.வேங்கடசாமி அவர்களும், வடுகரது ஆண்மை விளங்கும் அரிய போர் முனைகளைக் கொண்ட பாலைவழி[10] என நியூ செஞ்சுரி புத்தக நிலையம் வெளியிட்டுள்ள பதிப்பிலும் கூறப்பட்டுள்ள விளக்கத்தினைக் காணும் போது வல்ஆண் என்பது வலிமையான ஆண் என்ற விளக்கம் தெளிவாகின்றன. மேலும்,

கல்வியென் என்னும், வல்ஆண் சிறாஅன்
-புறம்:346

என்ற பாடல் வரிக்கு விளக்கமாக ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் வல்லாண்மையுடைய இளையனாகிய இவள் தமையன்[11] சிறிது கல்வியறிவு உடையவன் எனக் குறிப்பிடுகிறார். அதாவது வலிமைமிகுந்த ஆணான இவளின் தமையன் சிறிது கல்வியறிவு உடையவன் எனக் கூறப்பட்டுள்ளது. இங்கு கல்வி அறிவு என்பது படைப் பயிற்சியைக் குறிப்பிடுகிறது.[12]

## பதுக்கையின் அமைப்பு

தி. சுப்பிரமணியன் அவர்கள் தன் நூலில் பதுக்கையின் அமைப்பினைக் குறித்து வெளியிட்டுள்ளார். அதாவது பதுக்கை என்பது,

தரையைத் தோண்டி அந்தக் குழியில் இயற்கையாகக் கிடைத்த பெரிய பலகைக் கற்களை நான்கு புறமும் நிறுத்தி, சதுர அமைப்பில் அல்லது செவ்வக அமைப்பில் ஓர் அறை உருவாக்கப்பட்டது. இதில் பக்கத்திற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பலகைக் கற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இக்குழியின் தரைப்பகுதி முதலில் பலகைக் கற்களால் பரவப்பட்டிருக்கும். தரையில் பரவப்பட்ட பலகைக் கல்லின் மேல் படையல் பொருட்கள் அல்லது ஈமப் பொருட்கள் வைக்கப்பட்டன. படையல் பொருட்களை வைத்த பின்னர் இக்கல்லறையைப் பெரிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பலகைக் கற்களைக் கொண்டு மூடப்பட்டன.[13]

என பதுக்கையின் அமைப்பு முறையினைத் தெளிவுபடுத்தியுள்ளார். இத்தகைய அளவிலும், பருமனிலும் உயர்ந்த பதுக்கையினைத் தொழில்நுட்ப கருவிகள் எதுவும் இல்லாத காலத்தில் எப்படி தூக்கி வைத்திருக்க முடியும்? இதனை உருவாக்கியவர்கள் எத்தனை பலம் மிக்கவராக இருந்திருக்க

முடியும் என்பதைப் பற்றி அறிய போதுமான தொல்லியல் தரவுகள் இல்லாத நிலையில் சங்ககால மக்களின் வாழ்வினைக் கண்ணாடி போன்று காட்டும் சங்க இலக்கியத்தில் இதற்கான தரவுகள் உள்ளன. அவற்றைக் குறித்து பின்வருமாறு காணலாம்.

### வல்லாண் பதுக்கை

வல்லாண் என்ற சொல்லானது வலிய ஆண் என்பதை முன்னர் கண்டோம். அதுபோல வல்லாண் பதுக்கை என்ற சொல்லானது அகநானூற்றில் 35வது பாடலில் இடம்பெற்றுள்ளது. அவை,

**வல்லாண் பதுக்கைக் கடவுள்** –அகம்:35

இப்பாடல் போர்முனையில் வென்று ஆக்களை மீட்ட வெட்சியாரை மேட்டு நிலத்தே வீழ்த்திய வில்லையே ஏராகக் கொண்டு வாழும் வாழ்க்கையினை உடைய சிறந்த அம்பினையுடைய கரந்தை வீரர்கள், பதுக்கையில் உள்ள கடவுளை வழிபடுவதற் காக நடுகல்லிற்கு மயிற்றோகைச் சூட்டி, துடியை அடித்து, நெல்லாக்கிய கள்ளொடு செம்மறிக் குட்டியைப் பலிகொடுக்கும் நிகழ்வினை விளக்குகிறது. இதில் வரும் **வல்லாண் பதுக்கைக் கடவுள் பேண்மார்** என்ற அடிக்கு **தங்கள் வலிய ஆண்மையா லிட்ட பதுக்கைக் கண்ணுள்ள கடவுளை வழிபட**[14] என ந.மு.வேங்கடசாமி அவர்களும் **மறவரது வலிய ஆண்மையாலிட்ட பதுக்கைக் கல்லிற் கடவுளைப் பேணும்**[15] என மயிலம் வே.சிவசுப்பிரமணியன் அவர் களும் விளக்கமளித்துள்ளனர். மேலும், ரா.இராகவையங்கார் அவர்கள் **வலிய ஆண்மையாலிட்ட பதுக்கை**[16] என பொருள் கூறியுள்ளதன் அடிப்படையில் பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் முதல்நிலையில் இருக்கக் கூடிய பதுக்கை என்ற அமைப்பினைப் பெருங்கற்காலத்தில் இனக்குழுவாக வாழ்ந்த வலிமைமிக்க ஆண்களால் உருவாக்கப்பட்டி ருக்கிறது என்பது தெளிவாகிறது. மேலும் பதுக்கையினை உருவாக்குவது தனது ஆண்மையின் வலிமையாகவும் அடையாள மாகவும் இருந்ததைச் சில உரையாசிரியர் கள் தங்களது உரையில் கூறியுள்ளனர். இதற்கானக் காரணம் பதுக்கையின் உருவா க்கம் கடினத்தன்னை வாய்ந்ததாக இருந்தது என்பதை மேலே கூறப்பட்டுள்ள அதன் அமைப்புமுறைக் கொண்டு அறியலாம். மேலும்,

ந. சி. கந்தையா அவர்கள் **வில் ஏர் வாழ்க்கையராகிய குறிதப்பாத அம்புடைய மறவரின் வலிய ஆண்மையின் ஞாபகமாக நிறுத்திய பதுக்கைக் கடவுள்**[17] என விளக்கம் கூறியிருப்பதைக் காணும்போது மறவர்கள் தங்களின் வலிமையினை நிரூபிக்கும் விதமாகப் பதுக்கையினை உருவாக்கியுள்ள னர் என்பது விளங்குகிறது. இதேபோலவே **நியூ** செஞ்சுரி புத்தக நிலையம் வெளியிட்டுள்ள அகநானூறு பதிப்பில் **தம் வலிய ஆண்மைக்கு அறிகுறியான மணற் குன்று அல்லது கற்குவியலின் மேலுள்ள நடுகல் தெய்வம்**[18] என்ற விளக்கத்தினைக் கொடுக்கிறது. இதன்மூலம் இரண்டு விதமானக் கருத்துகள் தெளிவாகின்றன.

⇒ பதுக்கை என்பது வலிமைமிக்க அல்லது விரைந்து செயல்படும் ஆண்களால் குழுவாக இணைந்து ஏற்படுத்தப் பட்டுள்ளது.

⇒ பதுக்கையினை ஏற்படுத்துவது பெருமைக் குரிய செயலாகவும் தங்கள் வலிய ஆண்மை யினை நிரூபிக்கும் விதமாகவும் இருந்துள்ளது.

### முடிவுரை

பெருங்கற்காலத்தில் வாழ்ந்த மக்கள் பண்பட்ட நாகரிகத்தோடு வாழ்ந்திருந்ததைப் பல தொல்லியல் அகழாய்வுக் குறிப்புகள் மூலம் நம்மால் அறிந்துக்கொள்ள முடிகிறது. குறிப்பாக, அவர்களின் வாழ்விடங்களில் கிடைக்கும் தரவுகளை விட புதைவிடங் களில் கிடைக்கும் ஈமச்சின்னங்கள் அம்மக்க ளின் நாகரிகமான வாழ்விற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இறந்தவர்களை மேட்டுப்பகுதியான இடத்தில் புதைத்து, அதற்கென்று பெரிய கற்களைக் கொண்டு நினைவுச் சின்னங்களை ஏற்படுத்தி அவர் களைத் தங்கள் இனத்தைக் காப்பவர்களாக பலசடங்குகளோடு வழிப்பட்டு வந்துள்ளனர். இப்படியானத் தகவல்கள் அனைத்தும் அகழாய்வில் கிடைக்கும் ஈமச்சின்னங்கள் மூலம் பெறமுடிகிறது. ஆனால் இதை யார் உருவாக்கினர் என்பதைத் தொல்லியல் தரவுகள் தெளிவுப்படுத்த முடியாத நிலையில் சங்க இலக்கியத்தில் அதற்கானக் குறிப்புகள் காணப்படுகின்றன. வல்லாண் பதுக்கை என்ற வார்த்தையினை இக்கட்டுரையில்

ஆராய்ந்ததில் வலியமைிக்க ஆண்களால் இப்பதுக்கைகள் உருவாக்கப்பட்டதை அறிந்துக் கொள்ள முடிகிறது.

## அடிக்குறிப்பு

1. தொல்லியல் நோக்கில் சங்ககாலச் சமூகம், கா.ராஜன், ப-22
2. பாட்டும் தொகையும், ப-146
3. **வல்விரைந்து** என்பதற்கு **யான் மிகவும் விரைந்து** என்ற பொருளினை H.வேங்கட ராமன் அவர்கள் தன் உரையில் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் வல் என்பது பாட்டும் தொகையும் குறிப்பிடும் **விரைவாக** என்ற பொருளுடன் ஒத்து நிற்கிறது. (நற்றிணை, H.வேங்கடராமன், ப -34)
4. **வல்வில்**–ஒரே காலத்தில் பல பொருள் களை ஊடுருவிச் செல்லும்படி அம்பை எய்யும் வலிய வில் என உ.வே.சா அவர்கள் விளக்கம் காண்கிறார். (குறுந் தொகை, உ.வே.சாமிநாதையர், ப-612)
5. அகநானூறு, ந.மு.வேங்கடசாமி நாட்டார், ப-79
6. அகநானூறு, ந.சி.கந்தையா, ப-127
7. அகநானூறு, நியூ சென்சூரி புத்தக நிலையம், ப-90
8. அகநானூறு, ந.சி.கந்தையா, ப-225
9. அகநானூறு, ந. மு. வேங்கடசாமி நாட்டார், ப-242
10. அகநானூறு, நியூ சென்சூரி புத்தக நிலையம், ப-326
11. புறநானூறு, ஔவை துரைசாமி, ப-391
12. புறநானூறு, நியூ சென்சூரி புத்தக நிலையம், ப-346
13. தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு, தி.சுப்பிரமணியன், ப-43
14. அகநானூறு, ந.மு.வேங்கடசாமி நாட்டார், ப-87
15. அகநானூறு, மயிலம் வே.சிவசுப்பிரமணி யன், ப-72
16. அகநானூறு, வே. இராஜகோபாலையங் கார், ப-57
17. அகநானூறு, ந.சி.கந்தையா, ப-133
18. அகநானூறு, நியூ சென்சூரி புத்தக நிலையம், ப-102

## பயன்படுத்தப்பட்ட நூல்கள்


1. இராஜகோபாலையங்கார்.வே (பதி.ஆ), **அகநானூறு மூலமும் உரையும்,** கம்பர் விலாசம், 1923.
2. ஔவை துரைசாமிப் பிள்ளை (உரை.ஆ), **புறநானூறு 2ம் தொகுதி,** பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2010.
3. கந்தையா. ந.சி (உரை.ஆ), **செவ்விலக்கியக் கருவூலம்-அகநானூறு,** தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை, 2008 (முதற்பதிப்பு).
4. சாமிநாதையர். உ. வே (உரை.ஆ), **குறுந்தொகை மூலமும் உரையும்,** உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 2020 (எட்டாம் பதிப்பு).
5. சிவசுப்பிரமணியன் மயிலை.வே (உரை. ஆ), **அகநானூறு (மணிமிடைபவளம்) மூலமும் உரையும்,** உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 1990 (முதற்பதிப்பு).
6. சுப்பிரமணியன்.தி, **தமிழகத்தில் பெருங் கற்காலப் பண்பாடு,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2018 (மூன்றாம் பதிப்பு).
7. செயபால்.இரா (உரை.ஆ), **அகநானூறு மூலமும் உரையும்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2007 (மூன்றாம் பதிப்பு).
8. ராஜம்.எஸ், **பாட்டும் தொகையும்,** மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, 1958 (முதற்பதிப்பு).
9. ராஜன்.கா, **தொல்லியல் நோக்கில் சங்க காலம்,** உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2010 (இரண்டாம் பதிப்பு).
10. வேங்கடசாமி நாட்டார். ந.மு (உரை.ஆ), **அகநானூறு மூலமும் உரையும்,** பாரதி பதிப்பகம், சென்னை, 2022 (முதற்பதிப்பு).
11. வேங்கடராமன்.H (உரை.ஆ), **நற்றிணை மூலமும் உரையும்,** உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 2019 (நான்காம் பதிப்பு).